உப்பூர் மிக உய்ய அனல் மின் திட்டம், (2X800MW)

| | | |
|---|---|---|
| நிறுவுத் திறன் | : | 2x 800 மெகாவாட் |
| திட்டத்தின் மொத்த மதிப்பு | : | ரூ 12778 கோடி |
| ஒப்பந்ததாரரின் பெயர் | : | பாரத மிகு மின் நிறுவனம், ( கொதிகலன், சுழலி, மின்னாக்கியின் மற்றும் அதனை சார்ந்த பொதுவியல் பணிகளுக்கு மட்டும்)<br>ரிலையன்ஸ் இன்பராஸ்டரக்சர் லிமிடெட் நிறுவனம் ( மின் நிலையத்தின் இதர பாகங்கள் மற்றும் அதனை சார்ந்த பொதுவியல் பணிகளுக்கு மட்டும்)<br>எல் & டி லிமிடெட் நிறுவனம் (கடல் நீர் உள்வாங்கும் மற்றும் வெளியேற்றல் அமைப்பிற்கான பணிகளுக்கு மட்டும்) |
| பொறியியல் , கொள்முதல் மற்றும் கட்டுமானத்திற்கான ஒப்பந்த விலை | : | அ) ரூ 5580 கோடி, ( கொதிகலன், சுழலி, மின்னாக்கியின் மற்றும் அதனை சார்ந்த பொதுவியல் பணிகளுக்கு மட்டும்)<br>ரூபாய் 5852 கோடி ( மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தின் திருத்தப்பட்ட விதிமுறைகளின் வரையறையை கடைப்பிடிப்பதன் பொருட்டு கொதிகலன் வடிவமைப்பின் மாற்றி அமைக்கும் பணி திருத்தத்திற்கு )<br>ஆ) ரூ.3647.48 கோடி( மின் நிலையத்தின் இதர பாகங்கள் மற்றும் அதனை சார்ந்த பொதுவியல் பணிகளுக்கு மட்டும்)<br>இ) ரூ.999 கோடி கடல் நீர் உள்வாங்கும் மற்றும் வெளியேற்றல் அமைப்பிற்கான பணிகளுக்கு மட்டும்) |
| திட்டத்தின் பணி விபரம்<br><br>அ) கொதிகலன், சுழலி, மின்னாக்கி க்கான பகுதி | : | 2x800 மெகாவாட் உப்பூர் மிக உய்ய அனல் மின் திட்டம் ஸ்தாபித்தலுக்கான கொதிகலன், சுழலி, மின்னாக்கி போன்ற இயந்திரங்களின் வடிவமைப்பு, பொறியியல் , தயாரிப்பு, வழங்குதல், பொருத்துதல், கட்டுமானம், சோதனை மற்றும் செயலாக்கத்திற்கு கொண்டு வருதல் ஆகியவற்றுடன் கூடிய இயந்திரவியல், மின்னியல், பொதுவியல்/கட்டுமானம் அடங்கிய வேலைகள்.<br><br>மற்றும் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் திருத்தப்பட்ட விதிமுறைகளின் வரையறையை கடைப்பிடிப்பதன் பொருட்டு கொதிகலனின் உட்பகுதியை புதுப்பித்தல் பணியை மேற்கொள்வதற்கான பணி ஆணைத்திருத்தம். |
| ஆ) இதர பாகங்களுக்கான பகுதி | | 2x800 மெகாவாட் உப்பூர் மிக உய்ய அனல் மின் திட்டம் ஸ்தாபித்தலுக்கான இதர பாகங்களின் வடிவமைப்பு, பொறியியல், தயாரிப்பு, வழங்குதல், பொருத்துதல், கட்டுமானம், சோதனை மற்றும் செயலாக்கத்திற்கு கொண்டு வருதல் ஆகியவற்றுடன் கூடிய இயந்திரவியல், மின்னியல், பொதுவியல்/கட்டுமானம் அடங்கிய வேலைகள். |
| இ) கடல் நீர் உள்வாங்கும் மற்றும் வெளியேற்றல் அமைப்பு : | | கடல் நீர் உள்வாங்கும் மற்றும் வெளியேற்றல் அமைப்புக்கான வடிவமைப்பு, பொறியியல் , தயாரிப்பு, வழங்குதல், பொருத்துதல், மற்றும் செயலாக்கத்திற்கு கொண்டு வருதல். |
| திட்டத்தின் நிதி ஆதாரம் | | மின் ஆற்றல் நிதி கழகம் |
| திட்ட ஆரம்ப நாள் | | 20.05.2016 (கொதிகலன் சுழலி மின்னாக்கி)<br>21.02.2018 (மின் நிலையத்தின் இதர பாகங்கள்)<br>08.05.2018 (கடல் நீர் உள்வாங்கும் மற்றும் வெளியேற்றல் அமைப்பு ) |
| திட்டம் முழு உற்பத்தி திறனை துவக்கும் நாள் | | 2022–23 ல் |

| | | |
|---|---|---|
| திட்டத்தின் தற்போதைய நிலவரம் | | 1. பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான அடிப்படையில் கொதிகலன், சுழலி, மின்னாக்கி ஆகிய பணிகளுக்கான பணி ஆணை 27.02.2016 அன்று பாரத மிகு மின் கழகதிற்கு வழங்கப்பட்டது. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் திருத்தப்பட்ட விதிமுறைகளின் வரையறையை கடைப்பிடிப்பதன் பொருட்டு கொதிகலன் வடிவமைப்பின் மாற்றி அமைக்கும் பணிக்கு 17.6.17 ல் திருத்தம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>2. பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் அடிப்படையில் (EPC) மின் நிலையத்தின் இதர பாகங்கள் மற்றும் அதனை சார்ந்த பொதுவியல் பணிகளுக்கான பணி ஆணை 21. 02.2018 அன்று ரிலையன்ஸ் இன்பராஸ்டரக்சர் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.<br>3. குளிரூட்டும் நீர் வழங்கல் மற்றும் வெளியேற்றல் அமைப்பிற்கான பணி ஆணை 08.05.18 அன்று எல் & டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.<br>4. கொதிகலன், சுழலி, மின்னாக்கி பகுதிக்குரிய சுமார் 70 ஏக்கர் நிலம் பாரதமிகு மின் கழகத்திற்கு வழங்கப்பட்டது. மேலும் மின் நிலையத்தின் இதர பாகங்களுக்கான பகுதிக்குரிய 552 ஏக்கர் நிலம் ரிலையன்ஸ் இன்பரா ஸ்டரக்சர் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. குளிரூட்டும் நீர் வழங்கல் மற்றும் வெளியேற்றல் அமைப்பு பகுதிக்குரிய சுமார் 22 ஏக்கர் பட்டா நிலம் எல் & டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. வழக்குகளில் உட்படுத்தப்பட்டுள்ள மீதமுள்ள சுமார் 354.46 ஏக்கர் பட்டா நிலம் கொதிகலன், சுழலி, மின்னாக்கி பகுதிக்குரிய ஒப்பந்ததாரர் மற்றும் மின் நிலையத்தின் இதர பாகங்களுக்கான பகுதிக்குரிய ஒப்பந்ததாரர் ஆகியவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.<br><br>5. திட்ட பணியிடத்திற்குரிய சில நில உரிமையாளர்கள் நிலம் கையகப்படுத்தும் விதியை எதிர்த்து வழக்குகள் பதிவு செய்துள்ளனர். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் இந்த வழக்குகளுக்கான எதிர்மறை வாதத்திற்கான கூறுகள் பதிவு செய்யப்பட்டு அதற்கான வாதங்கள் 26.10.2018 அன்று நடைபெற்று இதற்கான தீர்ப்பு 03/07/2019 அன்று நில உரிமையாளர்களுக்கு சாதகமாக வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசு மேல் முறையீட்டுக்காக உச்சநீதி மன்றத்தை நாட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.<br>மேலும், அனைத்து விவசாயிகள் பாதுகாப்பு நல சங்கம் டிசம்பர் 2017 ல் இத்திட்டத்திற்கான இடத்தின் சில பகுதிகள், அருகிலுள்ள நீர் தேக்கங்களிலிருந்து வெளிவரும் அதிகப்படியான நீர் வரத்தை தடைசெய்யும் பொருட்டு அமைந்துள்ளதாக முறையிட்டுள்ளனர். இந்த அருகில் உள்ள நீர் தேக்கங்களிலிருந்து வெளிவரும் அதிகப்படியான நீர் வரத்தை செயற்கை கால்வாய் கட்டி மற்று பாதை அமைத்து சிற்றோடைகளில் உள்ள சதுப்பு நில தோட்டத்தை பாதுகாக்கும் நிபந்தனையின் படி இத்திட்டத்திற்கான சுற்றுப்புறச்சூழல் அனுமதிக்கான திருத்தம் மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் இந்த வழக்கிற்கான எதிர்மறை வாதத்திற்கான கூறுகள் பதிவு செய்துள்ளது.<br>மேலே குறிப்பிட்ட வழக்குகளோடு மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதி வழங்கியதை எதிர்த்து தேசிய பசுமை தீர்ப்பாயகத்தில் 2016 ல் அப்பகுதி விவசாயிகள் முறையீடு செய்துள்ளனர். இந்த வழக்கு தீர்ப்பாயகத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. |

| | | |
|---|---|---|
| | | 6. கொதிகலன், சுழலி, மின்னாக்கி பகுதி:<br>புவி தொழில் நுட்ப ஆய்வு முடிவுற்றன . அலகு I மற்றும் அலகு II ற்கான மின்னியல் விரைவூக்கி, அரவை பகுதி, மின்நிலைய பகுதி, மின்மாற்றிக்கான பகுதி மற்றும் அலகு I- ற்கான கொதிகலன்ஆகியவற்றில் நிலத்தூண் அமைக்கும் பணிகள் முடிவுற்றன. அலகு I மற்றும் அலகு II - ற்கான ஈர்க்கும் விசிறிக்கான குழாய் தாங்கிக்கான பகுதி, அலகு II - ற்கான கொதிகலன் ஆகியவற்றில் நிலத்தூண் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அலகு I மற்றும் II ற்கான கொதிகலன், அரவை பகுதி, மின்நிலைய பகுதி மற்றும் அலகு I- ற்கான மின்னியல் விரைவூக்கிகான பகுதியில் நிலத் தூண் முகப்பு அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்ட பணியிடத்திற்கான அலுவலக கட்டுமானப் பணிகள் முடிவுற்றது. கட்டுமான அமைப்பினை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. மின்னியல் விரைவூக்கி தூண்களுக்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>7. மின்நிலையத்தின் இதர பாகங்களுக்கான பகுதி:<br>நிலப்பரப்பளவு ஆய்வு மற்றும் புவி தொழில் நுட்ப ஆய்வு பணிகள் ரிலையன்ஸ் இன்பராஸ்டரக்சர் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நிலத்தில் பணி முடிவுற்றது. பண்டகசாலைக்கான மற்றும் ரிலையன்ஸ் இன்பராஸ்டரக்சர் லிமிடெட் நிறுவனத்தின் திட்ட பணியிடத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>8. கடல் நீர் உள்வாங்கும் மற்றும் வெளியேற்றல் அமைப்பு :<br>புவி தொழில் நுட்ப ஆய்வு முடிவுற்றன. சோதனை நிலத்தூண் அமைக்கும் பணிகள் முடிவுற்றன. நிலத்தூண் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலத்தூண் முகப்பு அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. குளிரூட்டும் நீர் வழங்கல் மற்றும் வெளியேற்றல் பகுதியில் நிலத்திற்கடியில் குழாய்கள் நிறுவும் பணி நடைபெற்று வருகின்றன. அலைதடுப்பான் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>தாங்கு அமைப்பு பழுதூக்கி நிறுவும் பணி நடைபெற்று வருகின்றன.<br>முன்நிலைபடுத்திய கான்கீரீட் உத்திரம் I மற்றும் கான்கீரீட் தகவல்பலகை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன |